செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

*பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை – 135* நாள்: 06.08.2026

# தமிழ் இலக்கணம் – நுண்ணாய்வுப் பயிலரங்கம்

# Tamil Grammar – Intensive Workshop

## பயிலரங்கம் – 16

## (18.08.2026 - 27.08.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் மொழி தொன்மையானதும் உயர்தனிச் செம்மொழியுமாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த தமிழ் மொழியில் எண்ணிலடங்கா இலக்கியங்கள், இலக்கணங்கள் உள்ளன. இவற்றுள் முதல் இலக்கண நூலாக அறியப்படும் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபினையுடையது. இன்றைக்கும் இவ்விலக்கண நூல் பயன்பாட்டில் உள்ளது. பல்வேறு வழிநூல்களுக்கும் இதுவே வழிகாட்டியாகவும் உள்ளது. இவ்வாறு தொல்காப்பியம் தொடங்கி தமிழ் மரபில் ஒவ்வொரு இலக்கணத்திற்கும் பல்வேறு நூல்கள் தோற்றப் பெற்றுள்ளன. இலக்கியச் செழுமையை எவ்வாறு தமிழ்மொழி பெற்றுள்ளதோ அவ்வாறே இலக்கண செழுமையையும் பெற்றுள்ளது என்பதே இதற்குக் காரணம் எனலாம். இதன் அடிப்படையில் செவ்வியல் இலக்கியங்களான **எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,** முதலான நூல்களுக்கு மரபிலக்கண அடிப்படையில் இலக்கண ஆய்வு, இலக்கண ஒப்பாய்வு, இலக்கணவியல் கோட்பாட்டு, இலக்கண குறிப்புகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் நுண்ணாய்வுப் பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் இலக்கணம், மரபிலக்கணம், மொழியியல் அறிவினையும் ஒருங்கே பெற்றுள்ள தமிழியல், மொழியியல் ஆகிய துறைகளில் இலக்கணத்தில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டும் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 20

- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **18.08.2026** முதல் **27.08.2026** முடிய 10 நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **9.00 - 1.00** & மாலை **2.00 - 7.00**.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்படும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/MsAAUWP6Bqp6KmQZ9 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **13.08.2026.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 13**.08.2026.** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **10 நாட்களும்** தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**